00626

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை

மட்டம் - 03

**EPU3234 – கலைத்திட்ட கற்கையும் செயன்முறையும் - அழகியல் ஆக்கத்திறன் கற்கைகள்**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

**திகதி:- 25.05.2025** நேரம்: பி.ப 01.30 - பி.ப 03.30

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

## பகுதி – I

1. “அழகியல் கல்வி” என்பதன் பதம் என்ன? வரைவிலக்கணம் மூலம் விளக்குக.
2. ஆக்கச் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தக் கூடிய **நான்கு (04)** கழிவுப் பொருட்களைக் குறிப்பிடுக.
3. இசை மற்றும் அசைவு நடவடிக்கைகள் பிள்ளைகளின் பேரியக்கக் திறன்களை விருத்தி செய்வதற்கு எவ்வாறு உதவுகிறது?
4. முன்பிள்ளைப் பருவ கல்வியில் பயன்படுத்தப்படும் **இரண்டு (02)** வகையான பொம்மலாட்டங்களைக் குறிப்பிடுக.
5. சிறுவர் சித்திரத்துடனான ஆக்கத்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியரின் வகிபங்கு என்ன என்பதை **மூன்று (03)** காரணங்கள் மூலம் சுருக்கமாக விபரிக்குக.
6. இசை மற்றும் தாள அசைவுகள் மூலம் விருத்தி செய்யக்கூடிய **நான்கு (04)** திறன்களைக் குறிப்பிடுக.
7. பிள்ளைகளின் வரைதலில் (சித்திரம்) முக்கிய நிலைகளைப் பெயரிடுக.
8. ஆரம்பக் கல்வியில் வெளிப்புற கற்றல் சூழலைப் பயன்படுத்துவதன் **மூன்று (03)** நன்மைகளைக் குறிப்பிடுக.

(05 x 08 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

9. **i.** ஆரம்பக் கல்வியில் அழகியல் கல்வியின் முக்கியத்துவத்தை உதாரணங்கள் மூலம் விளக்குக.

(08 புள்ளிகள்)

**ii.** அழகியல் செயற்பாடுகளின் **நான்கு (04)** முக்கிய ஆட்சிகள் (ஆக்க இயக்கம், ஆக்க இசை, ஆக்க விளையாட்டு மற்றும் செயல்பாடுகள்) இளம் பிள்ளைகளின் திறன்களை விருத்தி செய்வதற்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதைப் பற்றி கலந்துரையாடுக. ஒவ்வொரு ஆட்சிக்குரிய குறிப்பிடத்தக்க உதாரணங்களை பயன்படுத்துக.

(12 புள்ளிகள்)



43

10. **i.** ஆரம்பக் கல்வியில் பயனுள்ள இசை மற்றும் அசைவுத் திட்டத்தை செயற்படுத்துவதில் ஆசிரியரின் வகிபங்கை விவரிக்குக.

(04 புள்ளிகள்)

**ii.** இசை மற்றும் அசைவு பிள்ளையொன்றின் முழுமையான விருத்திக்கு எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை விளக்குக. இசை மற்றும் அசைவுக்குரிய அனுபவங்கள் மூலம் சமூக, மனவெழுச்சி, உடல், அறிவாற்றல் மற்றும் மொழித்திறன்கள் எவ்வாறு விருத்தியடைகின்றன என்பதை விபரிக்க உதாரணங்களைப் பயன்படுத்துக.

(08 புள்ளிகள்)

**iii.** "இசை என்பது சுய வெளிப்பாடு மற்றும் தனிப்பட்ட விருத்திக்கு உதவும் ஒரு சுவாரஸ்யமான கலை வடிவம்."

நீங்கள் இக்கூற்றுடன் உடன்படுகின்றீர்களா? இந்தக் கூற்றுக்கு பொருத்தமான பதிலைத் தருக.

(08 புள்ளிகள்)

11. **i.** நாடகக் கதை கூறல் மூலம் பிள்ளைகளுக்கு ஏற்படும் **ஐந்து (05)** நன்மைகளைப் பட்டியலிடுக.

(08 புள்ளிகள்)

**ii.** கதை கூறலின் **இரண்டு (02)** முக்கிய கூறுகளையும், இம்முறை வகுப்பறையில் மொழி மற்றும் ஒழுக்க விருத்தியை எவ்வாறு ஆதரிக்கிறது என்பதையும் விளக்குக.

(12 புள்ளிகள்)

12. **i.** கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் முன்பள்ளி/ ஆரம்ப பிரிவு வகுப்பறையில் பொம்மலாட்டங்களைப் பயன்படுத்துவதன் **ஐந்து (05)** முக்கியத்துவத்தை பட்டியலிடுக.

(05 புள்ளிகள்)

**ii.** ஆரம்ப பிரிவு வகுப்பறையில் பொம்மலாட்டத்தை திட்டமிடுதல், வழிநடத்துதல் மற்றும் எளியதாக்குதல் ஆகியவற்றில் ஆசிரியரின் வகிபங்கு பற்றி கலந்துரையாடுக.

(07 புள்ளிகள்)

**iii.** கற்பித்தல் முறையாக பொம்மலாட்டத்தை வினைத்திறனாக பயன்படுத்த ஆசிரியர் என்ன திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி கலந்துரையாடுக.

(08 புள்ளிகள்)

13. **i.** "சித்திரம் என்பது முன்பள்ளி/ ஆரம்பக்கல்வியின் சுய வெளிப்பாட்டிற்கான ஒரு ஊடகம்"

பிள்ளைகள் வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாத எண்ணங்களையும் மனவெழுச்சிகளையும் தொடர்பு கொள்ள சித்திரத்தை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதை எடுத்துரைப்பதன் மூலம் இந்த அறிக்கையை விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்க.

(08 புள்ளிகள்)

**ii.** ஆரம்பப் பிரிவு பிள்ளைகளில் ஆக்க சித்திர நடவடிக்கைகள் மனவெழுச்சி, சமூக மற்றும் அறிவாற்றல் விருத்தியை எவ்வாறு ஆதரிக்கின்றன என்பது பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

- முழுப்பதிப்புரிமையுடையது -